பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 06 | வியாழக்கிழமை | 23.10.2025 | அதிர்வு 084

**பாதாள உலகக் குழு தாதா**

## கெஹெல்பத்தரவின் சொத்துக்கள் பறிமுதல்



பாதாள உலகக் குழுத் தலைவர் கெஹெல்பத்தர பத்மேவினால் சட்டவிரோதமாகச் சேர்க்கப்பட்ட 06



**நாடாளுமன்றில் சஜித் அணிக்கு அரசு இப்படி பதிலடி**

# சுட்டுக் கொல்லப்பட்ட வெலிகம தவிசாளர் பாதாளக் குற்றவாளி



**+ நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக 6 வழக்குகள்**

**+ சிறைத் தண்டனையையும் அனுபவித்துள்ளார்**

“துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்துள்ள வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர பாதாளக் குழு குற்றவாளி. இவர் பல சமூக விரோதக் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார். இவருக்கு எதிராக நீதிமன்றத்தில் ஆறு வழக்குகள் உள்ளன. இவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சிறைக்கும் சென்றுள்ளார். பாதாளக் குழுக்களுக்கிடையிலான மோதலின் விளைவாகவே இவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். 06

## விசாரணை செய்ய 4 விசேட பொலிஸ் குழுக்கள் நியமனம்

**‘மிதிகம லசா’வுக்கும் ‘ஹரக் கட்டா’வுக்கும் இடையில் தொடர்பு உண்டு என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு**

‘மிதிகம லசா’ என அழைக்கப்படும் வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர ஹேவத் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.”

– இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறுகையில்,

‘மிதிகம லசா நேற்று புதன்கிழமை காலை 10.30 மணியளவில் வெலிகம பிரதேச சபை அலுவலகத்தில் இருக்கும் போது, மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், அலுவலக அறைக்குள் 06






தென்னிலங்கையில் இருந்து சகல கட்சிகளையும் சேர்ந்த இளம் அரசியல்வாதிகள் சுமார் 20 – 25 பேர் வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் – சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் – வடக்கே வந்து தங்கி இருந்து இங்கு இருக்கின்ற நிலைமைகளை நேரில் பார்வையிட இருக்கின்றனர்.

அவர்கள் வடக்கே வருவதற்கான பயணத்தின் மையக் கட்டமைப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி செயல்படும் என்று தெரிய வருகிறது.

தென்னிலங்கையில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த இளம் அரசியல்வாதிகள் இந்த வடக்கிற்கான பயணத்தில் பங்குபற்றுகிறார்கள்.

காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம், விடுபடாமல் படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கும் வடக்கு மக்களின் காணிகள், வலிந்து காணாமலாக்கப்படோரின் பெற்றோரின் அவல நிலை போன்றவற்றை இந்தக் குழுவினர் நேரடியாக பார்வையிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன எனத் தெரிகிறது.

வடக்கில் உள்ள உள்ளூராட்சி 06

# வெலிகம தவிசாளரின் கொலை திட்டமிட்ட அரசியல் பழிவாங்கலா?

## ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம்



“வெலிகம பிரதேச சபை தவிசாளர் லசந்த விக்கிரமசேகர பதவியேற்ற அன்றைய தினமே அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. எனவே, அவரது பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு அரசிடம் பலமுறை வலியுறுத்தியிருக்கின் றோம். ஆனால், அதனை அரசு கண்டுகொள்ளவில்லை. அந்தவகையில் இந்தக் கொலை திட்டமிட்ட ஓர் அரசியல் பழிவாங்கலா என்ற சந்தேகம் எழுகின்றது.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலா ளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடு கையில்,

“வெலிகம பிரதேச சபை தவிசாளர் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். தேசிய பாதுகாப்பு தொடர்பில் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த போதிலும், அரசு அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. குறிப்பாக வெலிகம பிரதேச சபை தவிசாள ருக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதையும், அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அரசிடம் தொடர்ந்தும் வலியுறுத்தினோம்.

ஜே.வி.பியின் செயற்பாடுகளாலேயே அரசியல்வாதிகளுக் குப் பாதுகாப்பு தேவை ஏற்பட்டது. 1988, 1989 களில் நாம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த போதும், எமக்குப் பாதுகாப்பு தேவைப்பட்டது. அன்றைய ஆட்சி காலத்தில் எமக்கான பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டன. ஆனாலும் நாடா ளுமன்றத்தின் மீது கூட குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டன. அதே நிலைமை மீண்டும் உருவெடுக்கின்றது.

தினந்தோறும் நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் துப்பாக்கிச் சூடுகள் இடம்பெறுகின்றன. இதனால் பலர் கொல்லப்படுகின் றனர்.

வெலிகம பிரதேச சபை தவிசாளர் கொலையானது திட்டமிட்ட அரசியல் பழிவாங்கலா என்பதை முன்னெடுக்கப் படவுள்ள விசாரணைகளின் மூலமே தெரிந்துகொள்ள முடியும். மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதி அவரது அலுவலகத்துக்குள் சுட்டுக் கொல லப்படுகின்றார் எனில் நாட்டில் பாதுகாப்பு எந்தளவுக்குப் பலவீனமடைந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

தவிசாளர் தெரிவுக்கான வாக்கெடுப்பின் போதும் லசந்த விக்கிரமசேகரவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. உறுப்பி னர்கள் சிலர் காணாமல் ஆக்கப்பட்டனர். இவ்வாறான பின்னணியிலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த அரசின் கீழ் இந்த ஆண்டுக்குள் நூற்றுக்கும் மேற் பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 50 இற் கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இவர் தவிசாளராகப் பதவியேற்ற அன்றைய தினம் நூற் றுக்கணக்கானோர் வரவழைக்கப்பட்டு அங்கு அமைதி யின்மை ஏற்பட்டது.

எனவே, இதற்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும். நீதி மன்ற உத்தரவுகளைக் கூட நடைமுறைப்படுத்த வேண்டாம் என அரசியல்வாதிகள் உத்தரவிடும் நிலைமையை நாடு அடைந்துள்ளது. இவற்றுக்கு மத்தியில் நாடாளுமன்ற உறுப் பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளது பாதுகாப்புக்கள் நீக்கப்பட்டுள்ளன.

1988, 1989களில் ஜே.வி.பியால் ஏற்படுத்தப்பட்ட கலவரத் தின் காரணமாகவே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாது காப்பு வழங்கப்பட்டது. தற்போது அவர்களது ஆட்சியில் அந்தப் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. அரசின் இந்தச் செயற் பாடுகளால் எதிர்க்கட்சியின் அரசியல்வாதிகள் பாரதூர மான பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள னர்.” – என்றார்.

# 8 கையடக்கத் தொலைபேசிகள் திருட்டு! சி.சி.ரி.வி. கமரா ஊடாக மூவர் கைது!!



அக்குறணையில் நேற்று நடைபெற்ற கிரிக்கெட் போட்டி ஒன்றில் பங்குபற்றியவர்களின் 8 கையடக்கத் தொலைபேசி களை களவாடிய சந்தேகநபர்கள் மூவர் சி.சி.ரி.வி. கமராவின் ஊடாகக் கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் போட்டிக்காக மாத்தளை பிரதேசத்தில் இருந்து சென்ற அணியினர் தமது கையடக்கத் தொலைபேசிகளை ஒரு பையில் இட்டு, தாம் பயணித்த ஓட்டோ ஒன்றில் வைத் தனர்.

போட்டி முடிந்து அவர்கள் திரும்பிச் சென்று பார்த்தபோது கையடக்கத் தொலைபேசி வைக்கப்பட்டிருந்த பை அங்கு இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

திருடப்பட்ட பையில் 8 கையடக்கத் தொலைபேசிகள் இருந்தன என்றும், அவற்றின் பெறுமதி 5 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா என்றும் தெரியவந்தது.

பின்னர், அவர்கள் இவ்விடயமாக அளவத்துகொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததன் அடிப்படை யில் பொலிஸார் சி.சி.ரி.வி. காட்சிகளைப் பரிசீலித்தனர்.

அதன்படி ஒரு சந்தேகநபரை அடையாளம் கண்டு விசாரித் ததில், அதில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கையடக்கத் தொலைபேசிகளை 8 ஆயிரம் ரூபாவுக்கு விற் பனை செய்தமை தெரியவந்தது.

மேலும் சந்தேகநபரிடம் தொடர்ந்த விசாரணைகளுக் கமைய, இரண்டு நண்பர்களுடன் சேர்ந்து மூவருமாக அந்தப் பணத்துக்குக் ஹெரோயின் போதைப்பொருளைக் கொள்வனவு செய்தமை தெரியவந்தது.

சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கிரிக்கெட் போட்டி அக்குறணை 7ஆம் கட்டை பிரதேச மைதானம் ஒன்றில் இடம்பெற்றது.

# தவிசாளர் கொலை தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி



"வெலிகம பிரதேச சபை தவிசாளர் யார் என்ற தனிப்பட்ட காரணிக்கு அப்பால் பொலிஸாரால் பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும். விசாரணைகள் நிறைவடையும் வரை இந்தக் கொலை தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது பிரயோசனமற்றது. இவ்வாறான திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் யாரானாலும் அவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசியல்வாதியானாலும், வர்த்தகரானாலும், வேறு தொழில்களில் ஈடுபடுபவர்களானாலும், பொது மக்களானாலும் இவ்வாறான துப்பாக்கிச்சூடுகளுக்கு இலக்காகும் போது பொலிஸாரால் சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

அந்த விசாரணைகளுக்கமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சிலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

உள்நாட்டில் கைது செய்யப்படுபவர்களிடம் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் கிடைக்கும் தகவல்களுக்கமைய வெளிநாடுகளில் உள்ள சந்தேகநபர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

அந்தவகையில் இந்தக் கொலை தொடர்பிலும் 4 பொலிஸ் விசாரணைக் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. விசாரணைகள் நிறைவடையும் வரை இது தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவது பிரயோசனமற்றது.

இந்தக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான பாரிய பொறுப்பு அரசிடம் உள்ளது. பாதாள உலகக் குழுக்களுக் கிடையில் துப்பாக்கிகளின் புலக்கத்தால் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் அதிகரித்துச் செல்கின்றன.

இதனை முற்றாக ஒழிப்பதற்காகச் சமூகம் என்ற ரீதியில் அனைவரும் இது குறித்த புரிதலுடன் செயற்பட வேண்டும். இவற்றுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் படிப்படியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்படுவர்." – என்றார்.

### யாழ். வயாவிளானில் தனியார் காணியில் அமைக்கப்படும்

# இராணுவ வைத்தியசாலைக்கு எதிராகச் சட்ட நடவழக்கை!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், வயாவிளானில் உள்ள தனியார் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் இராணுவ வைத்தியசாலைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வயாவிளானில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரால் கையகப்படுத்தி வைத்திருக்கும் தனியார் காணியில் சட்ட விரோதமான முறையில் இராணுவ வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

காணி உரிமையாளரின் கோரிக்கையை அடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் மற்றும் வலிகாமம் வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் காணி உரிமையாளருடன் காணி அமைந்துள்ள பகுதிக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று, உயர் பாதுகாப்பு வலய எல்லையுடன் நின்று, வைத்தியசாலையின் கட்டட வேலைகளை அவதானித்தனர்.

காணி உரிமையாளருடன் கலந்துரையாடிய எம்.ஏ.சுமந்திரன், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் வைத்தியசாலைக் கட்டுமானத்துக்கு எதிராக மிக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

## ஐஸ் இரசாயனங்கள் சிக்கிய விவகாரம்:

# பியல் மனம்பேரிக்கு விளக்கமறியல் நீடிப்பு!



மித்தெனியவில் காணி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் "கெஹெல்பத்தர பத்மே"வின் ஐஸ் போதைப் பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பியல் மனம்பேரியை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு வலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பியல் மனம்பேரி நேற்று புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது "கெஹெல்பத்தர பத்மே", "கொமாண்டோ சலிந்த" மற்றும் "பாணந்துறை நிலங்க" உள்ளிட்ட 5 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் கடந்த ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

இதனையடுத்து "கெஹெல்பத்தார பத்மே" உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட பாதாள உலகக் கும்பல் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து அவர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதன்போது "கெஹெல்பத்தார பத்மே" வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் மித்தெனியவில் உள்ள காணி ஒன்றில் கடந்த செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி மேற்கொள்ளப் பட்ட சோதனையில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு ப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் உறுப்பினர் சம்பத் மனம்பேரியின் சகோதரர் பியல் மனம்பேரி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 'லொக்கு பெட்டி'யின் பணத்தைக் கையாண்ட தேவாலய பூசாரிக்கு 24 வரை விளக்கமறியல்!

'கிளப் வசந்த' படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'லொக்கு பெட்டி' என்பவருக்குச் சொந்தமான பணத்தைக் கையாண்டு வந்த தேவாலய பூசாரியை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

'கிளப் வசந்த' என்று அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேரா என்பவர் கடந்த 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதி அத்துருகிரிய பிரதேசத்தில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 'லொக்கு பெட்டி' என்பவர் பெலாரஸில் வைத்து கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் சட்டவிரோத சொத்து விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபரான தேவாலய பூசாரி இம்மாதம் 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

தேவாலய பூசாரியின் வங்கிக் கணக்கில் 33 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது என்றும், அந்தப் பணம் 'லொக்கு பெட்டி'க்கு சொந்தமானது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தேவாலய பூசாரி கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொடரும் சீரற்ற காலநிலை! 9 ஆயிரத்து 542 பேர் பாதிப்பு!!

## நால்வர் பரிதாப மரணம்

நுவரெலியா, கண்டி, பதுளை, குருநாகல், காலி உட்பட நாட்டில் 12 மாவட்டங்களில் நிலவும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் 2 ஆயிரத்து 395 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 542 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையால் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று புதன்கிழமை மதியம் வெளியிட்டுள்ள நாளாந்த நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம், மண்சரிவால் 2 வீடுகள் முழுமையாகவும், 422 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.



சீரற்ற காலநிலையால் காலி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிட்டத்தக்கது.

# கொழும்பு மகாநாமா கல்லூரியில் மூன்று சிறார்கள் துஷ்பிரயோகம்

## குற்றவாளிக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துங்கள் என்று நாடாளுமன்றத்தில் சஜித் பகிரங்க வேண்டுகோள்

சிறார்களின் உரிமைகள் தொடர்பில் பேசும் தருணத்தில், கொழும்பு மகாநாம கல்லூரியில் கற்கும் மூன்று பிள்ளைகளை அந்தப் பாடசாலைக்குப் பொறுப்பான தலைமைப் பாதுகாப்பு அதிகாரி இந்த மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பிள்ளைகள் குறித்து அதிபரோ அல்லது ஆசிரியர்களோ எந்தத் தெளிவானதொரு நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. மருத்துவர்களிடம் அனுப்பும் நடவடிக்கையோ, தொடர்புடைய பாதுகாப்பு நிறுவனம் குறித்தோ அல்லது இந்த துஷ்பிரயோகத்தைச் செய்த குற்றவாளிக்கு எதிராகவோ எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இரு ஆசிரியர்கள் இது தொடர்பில் அதிபரோடு பேசும் போது அதிபர் அந்த இரு ஆசிரியர்களையும் மிரட்டியுள்ளார். இது குறித்து முறைப்பாடு பதிவு செய்ய முற்படும் போது, நீதிமன்றங்கள் தோறும் அலைத்துச் செல்ல வேண்டி வரும் என்றும், பல ஆண்டுகளாக வழக்குகள் இழுத்தடிக்கப்படலாம் என்றும் பெற்றோர்களை அதிபர் பயமுறுத்தியுள்ளார். பாடசாலை முன்பாக போராட்டமொன்றை முன்னெடுப்பதற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



இந்த விவகாரம் குறித்து முறையான விசாரணையை நடத்தி, அந்தப் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்குமாறும், இந்த விடயம் குறித்து ஆராய்ந்து பார்க்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இந்தக் குற்றவாளி மீது சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தச் செல்வாக்குக்கும் அடிபணியாமல் விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– என்றார்.

# யாழில் மின்சாரம் தாக்கி மாற்றுத்திறனாளி மரணம்

யாழ்ப்பாணத்தில் நேற்று மின்சாரம் தாக்கி மாற்றுத்திறனாளி ஒருவர உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த புவனேந்திரன் தேவபாலன் (வயது 47) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இவருக்குப் பிறப்பிலேயே கை, கால்கள் என்பன செயற்பாடுகள் அற்றுக் காணப்படுகின்றன.

நேற்று முற்பகல் 10 மணியளவில் தனது வாயினால் மின்சார ஆழியினுள் மின் இணைப்புக்காக வயரைச் செருக முற்படும் போது அவர் மீது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.



அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபைகளின் தவிசாளர்கள், இங்கு உள்ள அரசியல் கட்சிகளின் இளம் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் என்று பல தரப்பினரையும் இவர்கள் நேரடியாகச் சந்தித்து உரையாடுவார்கள் என்றும் தெரிகின்றது.

அந்த இளம் தலைவர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கான வடக்கு பயணத்தின் ஒழுங்கமைப்பை இலங்கைத் தமிழரசு கட்சி செய்வதாகத் தெரியவந்தது.

* * *

நாட்டில் இப்போது சாதாரண சில்லறை கடைகளுக்கு மவுசு அறவே இல்லை. அவற்றை கவனிப்பாருமில்லை. எல்லோரும் சுப்பர் மார்க்கெட்டுகளில் – கவர்ச்சிகரமாகப் பக்கெட் செய்த – பொருள்களைத் தேடி வாங்குவதில்தான், அதுவும் அதிக விலை கொடுத்து வாங்குவதில்தான் நாட்டம் கொண்டுள்ளார்கள்.

இதனால் வடக்கிலும், கிழக்கிலும் கூட நகரம், புற நகரம் என்று இல்லாமல் எல்லா இடங்களிலும் இப்போது சுப்பர் மார்க்கெட்டுகள் காளான்கள் முளைப்பது போல முளைத்து வருகின்றன.

ஏற்கனவே புகழ்பெற்ற சில சுப்பர் மார்க்கெட்டுகளின் அமைப்புகள் நாடு முழுவதிலும் இருக்கின்றன.

அந்த வகையறாவில் புதிதாக – மிகுந்த வளம் மிக்க – ஹெய்லீஸ் நிறுவனமும் இணையப் போவதாக அறிவித்தல் வெளியாகி இருக்கின்றது.

ஹெய்லீஸ் நிறுவனத்தின் அரைவாசிக்கும் மேற்பட்ட பங்குகளை இலங்கையின் மிகப்பெரிய பணக்காரரான தம்மிக பெரேரா வைத்திருக்கின்றார் என்பது தெரிந்த விடயமே.

அவரது ஹெய்லீஸ் நிறுவனம் இலங்கை முழுவதும் நகரங்கள் மற்றும் புற நகரங்களில் 100 சுப்பர் மார்க்கெட் நிலையங்கள் கொண்ட தொகுதியை புதிதாக ஆரம்பிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றது.

ஆக, நாட்டில் பிரபல்யமான சுப்பர் மார்க்கெட்டுகளுக்கு இடையேயான போட்டி இன்னும் சூடு பிடிக்கப் போகின்றது என்றுதான் தோன்றுகிறது....!

* * *

தற்போது நாடு முழுவதும் நடைபெற்று வரும் கூட்டுறவுத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தியினர் படுதோல்வியைச் சந்தித்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்திற்குள் வரலாற்றில் எந்த அரசாங்கமும் இது போன்ற ஒரு தோல்விப் போக்கைச் சந்தித்ததில்லை என்று முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஆனால், கூட்டுறவுத் தேர்தல் பொதுக் கருத்தைப் பிரதிபலிக்காது என்று அரசாங்க அமைச்சர்கள் இப்போது சமாதானம் கூறுகின்றனர்.

ஆயினும் தேசிய மக்கள் சக்தி, முன்னர் எதிர்க்கட்சியில் இருந்த சமயம், இத்தகைய கூட்டுறவுத் தேர்தல்களில் வெற்றி பெற்றபோது, தற்போதைய ஜனாதிபதி அதைப்பொதுக் கருத்தின் பிரதிபலிப்பு என்று வர்ணித்தார் என்பதை லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நினைவுபடுத்துகின்றார்.

தற்போதைய அரசாங்கம் தொடர்பான உண்மையான பொதுக் கருத்து கூட்டுறவுத் தேர்தல்களில் பிரதிபலிக்கிறது என்று அவர் வலியுறுத்துகின்றார்.

ஆக, உள்ளூராட்சித் தேர்தல் தோல்விகளை அடுத்து, கூட்டுறவுத் தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்தி பின்னடைவு கண்டு வருவதால், மாகாண சபைத் தேர்தல்கள் இனி எட்டா உயரத்துக்கு மலையேறி விடும் என்றுதான் தோன்றுகின்றது.

## கெஹெல்பத்தரவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

50 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கெஹெல்பத்தர பத்மேவுக்குச் சொந்தமானதாக அடையாளம் காணப்பட்ட சொத்துக்கள் பின்வருமாறு:–

* இல 260 – 1, மடெல்கமுவ, படபொத்த, உடுகம்பொல என்ற முகவரியில் உள்ள ஹோட்டலுக்குப் பின்னால் அமைந்துள்ள 20 பேர்ச் காணி.

*இல 260–1, மடெல்கமுவ, படபொத்த, உடுகம்பொல என்ற முகவரியில் உள்ள அதே ஹோட்டல் வளாகத்தில் அமைந்துள்ள ஆறு அறைகளைக் கொண்ட பகுதியளவு முடிக்கப்பட்ட கட்டடம்.

இந்த சொத்துக்கள் தொடர்பான தொடர்புடைய உண்மைகள் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன,

மேலும் சட்டத்தின் பிரிவுகள் 8(1) மற்றும் 8(2) இன் படி பணிநீக்கம் உத்தரவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன்படி, கெஹெல்பத்தர பத்மேவுடன் தொடர்புடைய சொத்துக்கள் நேற்று அதிகாரபூர்வமாகப் பறிமுதல் செய்யப்பட்டன.

அண்மையில், இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையில் கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளிகள் ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடம்தொடர்ந்துமுன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கமைய, பல்வேறு நடவடிக்கைகளைப் பொலிஸாரும் குற்றப் புலனாய்வு பிரிவினரும் முன்னெடுத்து வருகின்றனர்.

---

## சுட்டுக் கொல்லப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் பல விடயங்களைக் குறிப்பிட்டார்கள். இந்தக் கொலை மற்றும் இதற்கு முன்னரான படுகொலைகளினால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும், பொதுமக்களின் பாதுகாப்புக்கும் எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை.

இந்த நாட்டில் பல குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் உள்ளார்கள். அவர்கள் பல குழுக்களாகப் பிரிந்துள்ளார்கள். அவர்களிடம் ஆயுதங்கள் உள்ளன. அவர்களுக்கிடையில் மோதல்கள் உள்ளன. இந்த விடயங்களை நான் கடந்த மே மாதம் 20 ஆம் திகதி சபையில் வெளிப்படுத்தியிருந்தேன்.

வெலிகம பிரதேச சபை தவிசாளரான லசந்த விக்கிரமசேகர என்ற பெயருடனான இவர் "வெலிகம லசந்த" என்று அழைக்கப்படுவார். இவர் மக்கள் பிரதிநிதியாக இருந்தாலும், இவர் பாதாளக் குழு குற்றவாளி. இவருக்கு எதிராக நீதிமன்றத்தில் 6 வழக்குகள் உள்ளன. இவர் சிறைத் தண்டனையையும் அனுபவித்துள்ளார். தற்போதும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை ஊடாகவே இவர் இருந்துள்ளார்.

இவர் பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளார். இந்த நபர் தொடர்பில் பல விடயங்கள் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன. அண்மையில் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட பாதாளக் குழுக்களின் உறுப்பினர்கள் பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பாதாளக் குழுக்களுக்கிடையில் மோதல்கள் உள்ளன. இந்தச் சம்பவமும் அவ்வாறானதே. ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறானவர்களைத் தமது கட்சிக்கு எவ்வாறு தெரிவு செய்தது என்பதை அறியமுடியவில்லை. பாதாளக் குழுக்கள் மற்றும் ஏனையோர் இவ்வாறு மோதிக் கொண்டு, இறப்பதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

பாதாளக் குழுக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு பின்னர் மக்கள் பிரதிநிதியான ஒருவர் பாதாளக் குழுக்களின் முரண்பாடுகளினால் கொலை செய்யப்பட்டவுடன் அதை "மக்கள் பிரதிநிதி கொலை" என்று எவ்வாறு குறிப்பிடுவது?

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் பாதாளக் குழுக்களுடனும், சமூக விரோதச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளார். இவருக்கு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்பதை ஐக்கிய மக்கள் சக்தியினர் தெரிந்து கொள்ள வேண்டும்." – என்றார்.

---

## விசாரணை செய்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நுழைந்து கதிரையில் அமர்ந்திருந்த "மிதிகம லசா" மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த "மிதிகம லசா" சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கறுப்பு நிற முகமூடிகளை அணிந்திருந்த இருவரே துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட பின்னர் இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் சென்ற துப்பாக்கிதாரிகளைக் கைது செய்வது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட "மிதிகம லசா" என அழைக்கப்படும் வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர ஹேவத் என்பவருக்கும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "ஹறக் கட்டா" என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன என்பவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. அதனால் பாதாள உலகக் கும்பலின் மோதல் காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்." – என்றார்.

### கெஹெல்பத்தர பத்மேவுடனான தொடர்பு குறித்து

# பிரபல மொடல் பியூமி ஹன்சமாலியை 3 மணித்தியாலங்கள் துருவிய சி.ஐ.டி.

தற்போது பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “கெஹெல்பத்தர பத்மே” என்பவருடன் தொடர்புகளைப் பேணி வந்தமை குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் பிரபல மொடல் பியூமி ஹன்சமாலியிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளுக்காகப் பிரபல மொடல் பியூமி ஹன்சமாலி நேற்று புதன்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றிருந்தார்.

இதன்போது “கெஹெல்பத்தர பத்மே”வுடனான தொடர்பு குறித்து பிரபல மொடல் பியூமி ஹன்சமாலியிடம் இருந்து சுமார் 3 மணிநேரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

“கெஹெல்பத்தர பத்மே”வுடனான தொடர்பு குறித்து எதிர்வரும் காலங்களில் பல நடிகைகள் மற்றும் பிரபலங்கள் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



### பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறி

# நகைகள், பணத்தைக் கொள்ளையிட்ட ஐந்து பேர் கொண்ட கும்பல் சிக்கியது!



பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறி வீட்டுக்குள் நுழைந்து நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்ட ஐந்து பேர் கொண்ட கும்பல் ஒன்று கேகாலை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கும்பல் கடந்த 9 ஆம் திகதி, தங்களைப் பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டு போதைப்பொருள் சோதனை செய்வது போன்று கேகாலை – திக்ஹேன பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து ஒரு கோடி 75 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இது தொடர்பில் கேகாலை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்தக் கொள்ளைக் கும்பல் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த இருவர் அம்பாறையிலும், ஒருவர் எம்பிலிப்பிட்டியிலும், மற்றைய இருவரும் கேகாலையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிமோனியா தொற்று காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

நிமோனியா தொற்றால் உயிரிழந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்தவர் கைதடி மத்தி கைதடியைச் சேர்ந்த சிவபாலசிங்கம் காந்தரூபன் (வயது 42) என்ற ஒரு பிள்ளையின் தாந்தையாராவார்.

குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கில் உள்ள தாயார் வீட்டில் இருந்த நிலையில் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் மருந்து எடுத்துவந்து கதிரையில் உட்காந்திருந்த போது உயிரிழந்துள்ளார்.

சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை அச்சுவேலிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.



பிரேத பரிசோதனையில் நிமோனியா தொற்றால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தாஜா பண்ணும் போக்கு

அண்மையில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இலங்கைப் பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கு புதுடில்லியில் செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது. அதை ஒட்டி தென்னிலங்கை அரசியல் விமர்சகர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ள விடயம் கவனிக்கத்தக்கது.

இலங்கையின் அரசுத் தலைவர் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிதான். அரசியல் அதிகார ஒழுங்கில் அவருக்கு அடுத்து இரண்டாவது மட்டத்தில் இருப்பவர்தான் நாட்டின் பிரதமர்.

பொதுவாக நாட்டின் தலைவரான ஜனாதிபதிக்குதான் இந்தியா செங்கம்பள - முதனிலை - வரவேற்பு வழங்குவது வழமை.

ஆயினும், நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் இரண்டு வெவ்வேறு அரசியல் சக்தி மையங்களாக இலங்கையில் இருந்த காலங்களில் ஜனாதிபதிக்கு மேலதிகமாக பிரதமருக்கும் இந்தியா செங்கம்பள வரவேற்பு கொடுப்பது வழமை என்று அந்த விமர்சகர் சுட்டிக் காட்டுகிறார்.

உதாரணமாக சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த சமயத்தில் இரண்டு அரசியல் மையங்கள் ஜனாதிபதியையும் பிரதமரையும் சூழத் தனித் தனியாக இருந்தன. அந்த யதார்த்தத்தை உள்வாங்கி, அச்சமயத்தில் ஜனாதிபதிக்கு மேலதிகமாக பிரதமரையும் தனியான ஓர் அரசியல் அதிகார மையமாகக் கருதி அவருக்கும் முக்கிய இடம் அளித்து வரவேற்பு கொடுத்தது இந்தியா.

இப்போது ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள். பிரதமர் ஹறிணி அமரசூரிய பிரதமர் பதவியை வகித்தாலும் ஆக கல்வி அமைச்சர் பதவி நிர்வாகம் மாத்திரமே அவரிடம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்கு மேல் ஓர் அதிகார மையமாக அரசுக்குள்ளும் சரி, ஆளும் கூட்டமைப்புக்குள்ளும் சரி அவர் இல்லை.

அப்படி இருந்தும் வழமைக்கு மாறாக, அவரை ஒரு தனி அதிகார மையம் போன்று கருதி, அவருக்கு புதுடெல்லியில் பெரு வரவேற்பும் தனி மரியாதை இந்திய அரசு கொடுத்திருப்பதாக அந்த விமர்சகர் சுட்டிக் காட்டுகிறார்.

இது இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தந்திரோபாய அணுகுமுறையை வெளிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் எதிர்கால அரசியல் விவகாரங்களைக் கையாளும் விடயத்தில் பொடி வைத்து புதுடில்லி காய்நகர்த்துவதின் தோற்றப்பாடாக இதைக் கொள்ளமுடியும்.

ஒருபுறம் நாட்டின் தலைவருடன் இராஜதந்திர உறவாடல். மறுபுறம் பிரதமருக்கும் செங்கம்பள வரவேற்பு. இன்னொரு புறம் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியின் செயலாளரும் அரசில் அங்கம் வகிக்காமல் அரசுக்குள் காத்திரமாகச் செல்வாக்குச் செலுத்தி வருபவருமான ரில்வின் சில்வாவை பெலவத்தையில் உள்ள அவரது கட்சி அலுவலத்துக்கே இந்தியத் தூதுவர் தேடிச் சென்று சந்தித்து மரியாதை செய்யும் நடவடிக்கை.

இலங்கை ஆளுந்தரப்பை அரவணைத்துத் தாஜா பண்ணும் இந்தியப் போக்கு ஊன்றிக் கவனிக்கப்படுகின்றது என்பது உண்மை.

# இந்திய இறக்குமதிகள் மீதான வரிகளை அமெரிக்கா 16 வீதமாக குறைக்க வாய்ப்பு!



இந்தியப் பொருட்களுக்கான அமெரிக்க வரிகளை தற்போதைய 50 வீதத்திலிருந்து சுமார் 15 தொடக்கம் 16 வீதம் வரை குறைக்கக்கூடிய நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்யும் நிலையில் இந்தியாவும் அமெரிக்காவும் இருப்பதாக கூறப்படுகிறது.

அறிக்கையின்படி, முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் முக்கியமாக எரிசக்தி மற்றும் விவசாயத் துறைகளில் கவனம் செலுத்துகிறது.

ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதியை இந்தியா படிப்படியாகக் குறைப்பது குறித்து விவாதிக்கப்படும் முக்கிய விடயங்களில் ஒன்றாகும்.

இது ரஷ்ய எரிசக்தி விநியோகங்களை உலகளாவிய அளவில் சார்ந்திருப்பதைக் கட்டுப்படுத்தும் வொஷிங்டனின் முயற்சிகளுடன் ஒத்துப்போகிறது.

பேச்சுவார்த்தைகளை நன்கு அறிந்த அதிகாரிகள், பேச்சுவார்த்தைகள் இறுதி கட்டத்தில் இருப்பதாகவும், இந்த மாத இறுதியில் நடைபெறவிருக்கும் ஆசியான் உச்சிமாநாட்டிற்கு முன்னர் ஒப்பந்தத்தை முடிக்க இரு தரப்பினரும் பணியாற்றி வருவதாகவும், அங்கு முறையான அறிவிப்பு வெளியிடப்படலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த வார தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இடையே நடந்த தொலைபேசி உரையாடலுக்குப் பின்னர் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஒப்பந்தம் முடிவடைந்தால், 2020 இல் கட்டண வேறுபாடுகள் காரணமாக பேச்சுவார்த்தைகள் முடங்கியதிலிருந்து இந்தியா–அமெரிக்க வர்த்தக உறவுகளில் மிக முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்கும்.

இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக அமெரிக்கா தொடர்ந்து உள்ளது.

அண்மைய ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம் 200 பில்லியன் டொலர்களைக் கடந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நடுவானில் பறந்து கொண்டிருந்த ஏர் இந்தியாவில் திடீர் கோளாறு!






மும்பையில் இருந்து நேற்று அமெரிக்காவின் நெவார்க் நகரத்துக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம், தொழில்நுட்ப கோளாறு காரணமாக மீண்டும் மும்பைக்கே திரும்பியுள்ளது.

ஏர் இந்தியா விமானம் ஏ.ஐ. 191 மும்பையில் இருந்து அமெரிக்காவின் நியூ ஜெர்சி அருகே நெவார்க் நகரத்துக்கு புறப்பட்டுச் சென்ற நிலையில் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது, விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதனை அடையாளம் கண்ட விமானிகள் குழு விமானத்தை உடனடியாக மீண்டும் மும்பைக்கே திருப்பியுள்ளனர்.

விமானத்தில் ஏற்பட்டுள்ள பழுது குறித்து பயணிகளிடம் தெரிவித்த விமான நிர்வாகம், அவர்களை பாதுகாப்பாக இறக்கி தங்குவதற்கும், உணவுக்கும் ஏற்பாடு செய்துள்ளதுடன் பின்னர், அவர்கள் வேறு விமானத்தில் நெவார்க் நகரத்துக்குச் செல்ல ஏற்பாடு செய்வதாகவும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, நியூயோர்க் நகரத்தில் இருந்து மும்பை புறப்பட இருந்த விமானம் ஏ.ஐ 144 ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஏர் இந்தியா நிர்வாகம் அறிவித்துள்ளது.





# போர் நிறுத்த நடவடிக்கையை கண்காணிப்பதற்கு இஸ்ரேலுக்கு படைகளை அனுப்பும் பிரித்தானியா

போர் நிறுத்தத்தை கண்காணிக்க பிரித்தானியா தங்கள் படைகளை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் அமெரிக்காவின் தலையீட்டுக்கு பிறகு அமுலுக்கு வந்துள்ளது என்றாலும், அவ்வப்போது இரு தரப்புகளுக்கு இடையிலும் சிறிய மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்நிலையில் காசாவில் நிலவும் பதற்றமான போர் நிறுத்தத்தை கண்காணிக்க அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று பிரித்தானியா தங்களது படை துருப்புகளை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்துள்ளது.

பிரித்தானியாவின் பாதுகாப்பு செயலாளர் ஜான் ஹீலி தெரிவித்த தகவலில், பிரித்தானிய இராணுவத்தின் மூத்த தளபதி மற்றும் சிறிய ராணுவ குழு காசாவில் போர் நிறுத்தத்தை கண்காணிக்க இஸ்ரேலில் நிலைநிறுத்தப்படும் என்று அறிவித்தார்.

மேலும் புதிதாக உருவாக்கப்படும் பல தரப்பட்ட கண்காணிப்பு முயற்சியில் பிரித்தானியா தன்னுடைய பங்கை ஏற்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் அமெரிக்காவின் தலைமையில் செயல்படும் சிவில் இராணுவ ஒருங்கிணைவு மையத்தில் பிரித்தானிய தளபதி துணைத் தலைவராக செயல்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு 10 நாள்கள் முன்னதாக, பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் இவெட் கூப்பர், இஸ்ரேலுக்கு பிரித்தானிய படைகளை அனுப்பும் எந்தவொரு திட்டமும் இல்லை என்று தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவின் தாக்குதலில் 6 பேர் மரணம் உக்ரைன் முழுவதும் இருளில் மூழ்கியது






உக்ரைன் மீது ரஷ்யா இரவு முழுவதும் நடத்திய தாக்குதலில் கீவ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ரஷ்யா நடத்திய இரவுநேர தாக்குதலில் நாடு முழுவதும் மின்வெட்டு ஏற்பட்டதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், இந்த தாக்குதலில் தலைநகர் கீவ் மற்றும் அதனைச் சுற்றிய பகுதியில் 6 பேர் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, "போரை இழுத்தடிக்க ரஷ்யா போதுமான அழுத்தத்தை உணரவில்லை என்பதை நிரூபிக்கும் மற்றொரு இரவு. தற்போது வரை 17 பேர் காயமடைந்துள்ளனர் என அறியப்படுகிறது. துரதிர்ஷ்டவசமாக, இரண்டு குழந்தைகள் உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர்." என்று சமூக ஊடகங்களில் தெரிவித்தார்.

# சுகயீனம் காரணமாக 7 வயது சிறுமி மரணம்

வலிப்பினால் நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு 07 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 6 ஆம் குறுக்குத் தெரு, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவயோகன் றிகானா (வயது 7) என்ற சிறுமி ஆவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மூச்சு விட சிரமப்பட்ட நிலையில், யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போது சிறிது நேரத்தில் சிறுமி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.

வலிப்பால் நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

# பிறந்து 13 நாள்களான ஆண் சிசு உயிரிழப்பு



கேணியா வியாதியினால் பிறந்து 13 நாள்களேயான ஆண் சிசு ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த சிசு அல்வாய் வடக்கு, அல்வாயைச் சேர்ந்த பரந்தாமன் நிரூசா தம்பதிகளின் சிசுவாகும்.

கடந்த 9 ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிசு பிறந்த நிலையில், பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சிசு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை(21) உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை பருத்தித்துறைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

கேணியா வியாதி காரணமாக உயிரழப்பு ஏற்பட்டதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை வர்த்தக சங்கத்தால் நாளை கவனவீர்ப்பு போராட்டம்

பருத்தித்துறை மரக்கறி சந்தையை நவீன சந்தை கட்டடத் தொகுதிக்கு இடமாற்றுமாறு வலியுறுத்தி பருத்தித்துறை வர்த்தக சங்கத்தினரால் நாளை வெள்ளிக் கிழமை கவனவீர்ப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மரக்கறி சந்தை வியாபாரிகளின் கோரிக்கைக்கு ஆதரவாகவும் பருத்தித்துறை நகர் வர்த்தகர்களது நலன் சார்ந்தும் பருத்தித்துறை நகரின் மத்தியில் உள்ள நவீன சந்தை கட்டடத் தொகுதிக்கு மரக்கறி சந்தையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்த கவனவீர்ப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலைய பகுதியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை இடம்பெறும் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு சகல வரத்தகர்களும் கடைகளை மூடி ஒத்துழைப்பதுடன், கவனவீர்ப்பு போராட்டத்திலும் பங்கேற்குமாறு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

# மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாக தர்மலிங்கம் லோகநாதன் பதவி உயர்வு




*Receiving the letter of Promotion as the Additional Director General of Customs From the Director General of Customs on 22/10/2025*

மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாக காரைநகர் களபூமியை சேர்ந்த தர்மலிங்கம் லோகநாதன் பதவி உயர்வு பெற்றுள்ளார். சுங்கச் சேவையில் பதவி வழி உத்தியோகத்தர் அடையக்கூடிய ஆகக்கூடிய பதவி இது என்பது குறிப்பிடத்தக்கது.

1992 ஆம் ஆண்டு நடந்த போட்டி பரீட்சையில் தெரிவாகி, 1993 ஆம் ஆண்டு உதவி சுங்க அத்தியட்சராக நியமனம் பெற்ற லோகநாதன், 2016 ஆம் ஆண்டு சுங்க அத்தியட்சராகவும் 2024 ஆம் ஆண்டு சுங்கப்பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றார்.

இவர், 1991 ஆம் ஆண்டு விஞ்ஞானமானி பட்டத்தை யாழ்.பல்கலைக்கழகத்திலும் 2009 ஆம் ஆண்டு முதுகலைமானி பட்டத்தை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திலும் பெற்றார். இவர் சுங்கத்திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் தலைவரும் சுங்க மேற்பார்வை உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவரும் ஆவார்.

இவர் காரைநகர் களபூமியை சேர்ந்த அமரர் தர்மலிங்கம் (இளைப்பாறிய சிரேஷ்ட வரி மதிப்பாளர் -இறைவரி திணைக்களம்)மற்றும் அமரர் திலகவதியின் சிரேஷ்ட புதல்வன் ஆவார்.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2026

## (01.01.2026 - 31.12.2026)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - ரூபா **1,180.00** (வற் வரியுடன்) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - 23.10.2025 - 11.11.2025<br>**(மு.ப 9.00 - பி.ப.2.30.00 மணி வரை)** |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 12.11.2025 மு.ப 10.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - 12.11.2025 மு.ப 10.00 மணிக்கு |

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **12.11.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. **சந்தைசுத்திகரிப்புபணிகளைகுத்தகையாளர்தாமேபணியாளர்களைவேலைக்கமர்த்திமேற்கொள்ளவேண்டும். ஒன்றுசேர்க்கப்பட்டதரம்பிரிக்கப்பட்டதிண்மக்கழிவுகளையும்,திரவக்கழிவுகளையும்அகற்றும்பணிமாநகரசபையால் மேற்கொள்ளப்படும். இதற்கான கட்டணம் குத்தகையாளரால் செலுத்தப்பட வேண்டும்.**
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர் களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
7. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.
8. **கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் 1/3 வைப்புப்பணத்தை 14.11.2025 ம் திகதி பி.ப 2.30** மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

| இல | விபரம் | கடை இல | பிணைப் பணம் | ஆரம்ப கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,255,500.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 58,100.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 1,801,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 2,740,000.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 1,021,511.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 1,200,000.00 |
| 7 | பண்ணை கோழி இறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 1,010,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 1,285,000.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 1,287,000.00 |
| 11 | செங்குந்தா கருவாட்டுக்டை | இல.01 | 5,000.00 | 141,000.00 |
| 12 | செங்குந்தா கோழிஇறைசிக்கடை | இல.02 | 5,000.00 | 512,800.00 |
| 13 | செங்குந்தா கோழிஇறைசிக்கடை | இல.03 | 5,000.00 | 660,000.00 |
| 14 | செங்குந்தா கோழிஇறைசிக்கடை | இல 04 | 5,000.00 | 663,500.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல05 | 5,000.00 | 1,075,000.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல06 | 5,000.00 | 1,001,150.00 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 705,887.02 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 626,234.98 |
| 19 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 71,100.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்ககடை | இல.02 | 5,000.00 | 961,000.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 411,500.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 24 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 25 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 26 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 28 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 29 | நாவாந்துறை கோழி இறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 630,000.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,401.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 441,000.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,111.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 712,210.00 |
| 37 | குருநகர் கோழி இறைச்சி | | 5,000.00 | 1,001,000.00 |
| 38 | பெரிய கடைமரக்கறிச்சந்தை | | 10,000.00 | 2,300,000.00 |
| 39 | பண்ணை மீன்சந்தை | | 10,000.00 | 11,500,000.00 |
| 40 | குருநகர் மீன்சந்தை | | 10,000.00 | 10,132,022.00 |
| 41 | செங்குந்தா சந்தை | | 10,000.00 | 6,278,850.00 |
| 42 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 582,320.00 |
| 43 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 120,101.00 |
| 44 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 669,000.00 |

**முதல்வர் ,**
**யாழ் மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**



# யாழில் போதை மாத்திரைகளுடன் 2 சந்தேகநபர்கள் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப் பாணம் போதை தடுப்புப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போது போதை மாத்திரைகள் வியா பாரி ஒருவரும் இதனுடன் தொடர்பு டைய சந்தேகநபர் ஒருவரும் கைது கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆறுகால்மடப் பகுதி யில் இந்தக் கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவர்கள் 20 மற்றும் 22 வயதுடைய இளைஞர் களாவர். இவர்களிடமிருந்து 110 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப் பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரான்ஸிலிருந்து சைக்கிளில் யாழ் வந்த சூரான்










பிரான்ஸில் பல்வேறு நாடுகளுக் கிடையில் சுமார் 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை கடந்து இன்று பிற் பகல் சூரான் என்ற இளைஞன் யாழ்ப்பா-மம் வந்தடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூரைப் பூர்வீக மாகக் கொண்ட குறித்த 28 வயது டைய சூரான் என்ற இளைஞன் இலங் கையின் மகத்துவத்தை உலகுக்கு எடுத் துச் சொல்லும் ஒரு பொறிமுறை யாகவே இந்த சைக்கிள் பயணத்தை முன்னெடுத்து யாழ்ப்பாணத்தை வந்த டைந்தார் எனக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் களை சந்தித்து தனது பயணம் குறித்து இவ்வாறு கூறிய அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

"நான் பாரிஸில் இருந்து இந்தப் பயணத்தை கடந்த செப்டம்பர் 01, 2025 அன்று ஆரம்பித்து, பிரான்ஸ், ஜேர் மனி, ஆஸ்திரியா, ஸ்லோவாக்கியா, ஹங் கேரி, சேர்பியா, பல்கேரியா, துருக்கி, ஜோர்ஜியா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ் தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற பல நாடுகள் வழியாக சுமார் 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை சைக்கிளில் பயணித்து இன்று எனது பூர்வீக இடமான நல்லூரை வந்தடைந் தேன்.

யாழ்ப்பாணம் எனது பெற்றோரின் சொந்த ஊர் என்பதால்தாம் எனது பயணத் தின் இறுதி இலக்காக யாழ்ப்பாணத்தின் நல்லூர் கோயிலைத் தேர்ந்தெடுத்திருந் தேன்.

அத்துடன் இலங்கை ஒரு நாடு மட்டு மல்ல, என் பூர்வீகத்துடன் தொடர்பு பட்ட எ உன்னத உணர்வு. எனது நோக்கம் தனது குடும்பத்துடன் மீண்டும் இணைவது மட்டுமல்லாமல்ல யாழ்ப்பாணத்தின் கலாசார முக்கியத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்துவதும் ஆகும்.

மேலும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும், பிராந்தியத்துடன் வலுவான உணர்வு மற்றும் கலாசார உறவுகளைப் பேணு கின்ற உலகளாவிய தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தை ஊக்குவிப்பதற்கும் ஒரு மதிப்புமிக்க வாய்ப்பை உருவாக்கு வதுமாகும்.

நான் பாகிஸ்தானுக்கும் சென்று வர முயற்சித்தேன். ஆனால் அந்நாடு அனுமதி மறுத்திருந்தது.

அதன்பின் இந்தியா சென்று கப்பல் மூலம் எனது இறுதி இலக்கான யாழ்ப் பாணம் வந்தடைந்துள்ளேன்.

இங்கு எனக்கு சிறப்பான வரவேற்பு கிடைக்கப்பெற்றது.

அத்துடன் நான் இந்த பயணத்தில் கரடுமுரடன சவால்களை எதிர்கொண் டாலும் அந்நாடுகளின் அரசுகளும் மக் களும் எனக்கு மிகுந்த வரவேற்பை யும் ஒத்துழைப்புகளையும் தந்திருந்த னர்.

அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறுகின்றேன்.- என தெரிவித்திருந்தார்.

இதே நேரம் சுமார் 40 வருடங்க ளுக்கு முன்னர் பெற்றோர் பிரான்ஸில் குடி யேறிய நிலையில் சூரானின் சரளமாக தமிழில் தனது உணர்வுகளை பகிர்ந்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வடமாகாண சுற்றுலாத் துறை அபிவிருத்தி; மன்னாரில் நேற்று விசேட கலந்துரையாடல்

**(மன்னார் நிருபர்)**

வடமாகாண சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல் வட மாகாண சுற்றுலா துறையின் அனுசரணையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் புதன் கிழமை மாலை

வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார பீடத்தின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்திற்கான இக்கலந்துரையாடலில் வியாபார கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் யோ. நந்த கோபன் தலைமையில் நடைபெற்றது.

இவ் நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்), வடமாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர், வன வள அதிகாரிகள், வன ஜீவராசிகள் அதிகாரிகள், பொறியியலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.













# மணல்காட்டில் முந்நூறு ஏக்கர் காணிகளை அபகரிக்கும் முயற்சி மக்களால் முறியடிப்பு!

**(பூ.லின்ரன்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணல்காடு கிராமத்தில் முந்நூறு ஏக்கர் காணி அபகரிப்பு முயற்சி நேற்று மணல்காடு மக்களால் முறியடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

நேற்றைய தினம் காலை 11 மணியளவில் வாகனம் ஒன்றில் வந்த - சிங்கள மொழி பேசுபவர்கள் - தனியார் காணிகள் உட்பட அரச காணிகள் மற்றும் சமூகக் காடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட சவுக்கமரக்காடு உட்பட 300 ஏக்கர் காணியை கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் அபகரிப்பதற்கு ஏதுவாக நில அளவை செய்வதற்கு முற்பட்டுள்ளனர்.

அங்கு காணி அளவீடு செய்வதை அவதானித்த கிராம மக்கள் உடனடியாக அவ்விடத்திற்கு சென்று காணியை அளவீடு செய்ய விடாது தடுத்துள்ளனர். காணி அளவிட வந்தவர்கள் மக்களை மிரட்டும் தொனியில் செயற்பட்டுள்ள நிலையில் மக்களின் கடும் எதிர்ப்பினால் அங்கிருந்து வெளியேறி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு சென்று, அங்கிருந்து மீண்டும் அளவீடு செய்யும் நோக்கில் மணல்காடு நோக்கிப் புறப்பட்டனர். ஆயினும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தயாராக நின்றமையை அறிந்திருந்தவர்கள் செம்பியன்பற்று பிரதேசத்திலிருந்து திரும்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கிராம மக்கள், தம்மில் பலருக்கு குடியிருக்கவே காணிகள் இல்லாத நிலை உள்ளதாகவும், இந்நிலையில் தனியர் நிறுவனம் ஒன்றிற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரால் காணி தானமாக வழங்கப்பட்டமையைத் தாம் எதிர்க்கின்றனர் என்றனர். ஒருபோதும் இப்படி வெளியார் காணிகளை அபகரிக்க அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.








# சிவனொளி பாதமலைக்கான பிரதான சாலையில் இருக்கும் சிவப்புப் பாலம் பழுதடைந்த நிலையில்

**(மஸ்கெலியா நிருபர்)**

ஹட்டன் நல்லதண்ணி பிரதான வீதியில் உள்ள - நல்லதண்ணி நகரில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பிரதான சாலையில் சிவப்பு பாலத்திற்குப் போடபட்ட கொங்கிரீட் உடைந்து போன நிலையில் உள்ளது.

இதனால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரும் பௌர்ணமி நாளில் சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு மாதங்கள் இடம் பெறும்.

அக்காலத்தில் பல லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசனம் செய்து விட்டு செல்வார்கள். உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வந்து செல்லும் காலம் இது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், சிவனொளி பாத மலைக்கு பொறுப்பான விகாராதிபதி, நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர், நோர்வூட் பிரதேச செயலாளர் மற்றும் மஸ்கெலியா பிரதேச சபையினர் முன் வந்து இந்த பிரதான பாலத்தை செப்பனிட்டு யாத்திரிகர்களின் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என அப்பகுதியில் உள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.








# புதுக்குடியிருப்பு மந்துவில்லில் தோட்டக்காணி ஒன்றில் எதையோ விழுங்கி அசைவற்ற நிலையில் வெங்கணாந்தி

(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மந்துவில் பகுதியில் தோட்டக்காணியில் வெங்கணாந்தி பாம்பு ஒன்று எதனையோ விழுங்கிய நிலையில் பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் உள்ள தோட்டக் காணியை அதன் உரிமையாளர் துப்பரவு செய்து கொண்டிருந்தபோது, பாம்பு ஒன்று எதனையோ விழுங்கிய நிலையில் அசைய முடியாது தடுமாறிக் கிடந்ததை அவதானித்தார்.

இதனை அவதானித்த காணி உரிமையாளர் உடனடியாக முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினார். அதையடுத்து, அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து பாம்பைப் பாதுகாப்பாக மீட்டு வேறு பகுதியில் விடுவித்துள்ளனர்.

தற்போது மழைக்காலம் நிலவி வருவதால் பாம்புகள் அடிக்கடி வெளிப்புற பகுதிகளுக்கு வரக்கூடிய வாய்ப்பு உள்ளதால், மக்கள் தங்கள் வீடுகளிலும் தோட்டங்களிலும் அவதானமாக இருக்குமாறு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.







# புதுக்குடியிருப்பு உலகளந்த பிள்ளையார் ஆலயத்தில் எட்டுக் கோடி ரூபா மதிப்பில் இராஜகோபுரம் அமையும்

## நேற்று அடிக்கல் நாட்டும் வைபவம்

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் ஆலயத்தில் 8 கோடி ரூபா செலவில் கட்டமைக்கப்படவுள்ள சப்த தளம் (ஏழு தளங்கள்) கொண்ட இராஜ கோபுர அடிக்கல் நாட்டும் விழா இடம் பெற்றது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பூஜைகள் மற்றும் வழிபாடுகளை தொடர்ந்து காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையிலான சுப வேளை யில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஆலய வளாகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஆலய பிரதம குருக்கள், ஆலய நிர்வாகிகள், கிராம மக்கள், பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் ஆலயத்தில் இன்றைய தினம் இடம்பெற்ற

இராஜ கோபுர அடிக்கல் நாட்டுவிழா வைத் தொடர்ந்து நாளை மறுதினம் காலை 4.30 தொடக்கம் காலை 6.00 மணிவரையுள்ள சுபவேளையில் பாலஸ் தாபன கும்ப உத்தாபனம் சிறப்புற இடம்பெற இருப்பதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.











# சாவகச்சேரிப் பகுதியில் சகல வெள்ள வாய்க்கால்களும் சீர்செய்து வெள்ளப் பாதிப்பைக் குறைக்க நடவடிக்கை

## பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேசசபை எல்லைக் குட்பட்ட சகல வெள்ள வாய்க்கால்களை யும் விரைவில் சீர்செய்து வெள்ள அனர்த் தத்தை குறைக்க நடவடிக்கை எடுத் திருப்பதாக பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத் துத் தெரிவிக்கையில் –

தொழில்நுட்ப ரீதியான இழுபறி நிலைமை காரணமாக 2025ஆம் ஆண்டிற்கான சபைநிதி வேலைகள் சில முடிவுறுத்தப்படாமல் உள்ளன.

தற்போது பிரதேசத்தில் வெள்ள வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சகல உறுப்பினர்களும் பிரதேசசபை ஊடாக ஜே.சி.பி. வாகனத்தைப் பெற்று தமது வட்டாரங்களில் உள்ள வெள்ள வாய்க்கால்களை சீர்செய்ய முடியும்.



சில இடங்களில் வெள்ள வாய்க் கால்கள் இயற்கையாக தடைப்பட்டுள்ளன. சில இடங்களில் செயற்கையாக தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அவற்றினை இதன்போது சீர் செய்ய வேண்டும்.

அத்துடன் 2025ஆம் ஆண்டிற் கான வேலைத்திட்டத்தில் சில வீதிப் பணிகள் நிறைவுறுத்தப்படாமல் உள்ளன. அவற்றைச் சீர் செய்யுமாறு உரிய ஒப்பந்த காரருக்கு கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. – என்றார்.

# புல நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

தெதுரு ஓயா, ராஜாங்கனை, அங்க முவ மற்றும் தப்போவ நீர்த்தேக்கங் களின் வான்கதவுகள் மேலும் திறக் கப்பட்டுள்ளன என நீர்ப்பாசனத் துறை தெரிவித்துள்ளது.

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 1.00 மணி நிலைவரப்படி, தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் 02 வான்கதவுகள் தலா 04 அடி திறக்கப்பட்டுள்ளன. திறக்கப் பட்ட வான்கதவுகளிலிருந்து வினாடிக்கு 5,038 கன அடி நீர் தெதுரு ஓயாவிற்கு வெளியேற்றப்படும் என்று நீர்ப்பாசனத் துறை கூறுகிறது.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 04 வான்கதவுகள் தலா 04 அடி திறக் கப்பட்டுள்ளன. திறக்கப்பட்ட வான்கதவு களிலிருந்து 3,472 கன அடி நீர் வெளி யேற்றப்படும்.

அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் தலா 2 அடி திறக்கப் பட்டுள்ளன. இந்த வான்கதவுகளி லிருந்து வினாடிக்கு 1,088 கன அடி நீர் வெளியேற்றப்படும்.

ராஜாங்கனை மற்றும் அங்கமுவ நீர்த் தேக்கங்களிலிருந்து வெளியேற்றப்படும் நீர் கலா ஓயாவிற்குள் பாயும் என்பதால், தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பேரிடர் மேலாண்மைப் பிரிவு தெரிவித் துள்ளது.

இதே நேரத்தில், தப்போவ நீர்த்தேக் கத்தின் 6 வான் கதவுகள் தலா ஒன்றரை அடி திறக்கப்பட்டுள்ளன.

திறக்கப்பட்ட வாயில்களிலிருந்து வெளியேற்றப்படும் நீர் மீ ஓயாவிற்கு வினாடிக்கு 1,890 கன அடி வீதம் செல்வ தால், தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் பேரிடர் மேலாண்மைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதே நேரத்தில், புத்தளம் மாவட்டத் தில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் நிலவும் மோசமான வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பேரிடர் மேலாண்மைப் பிரிவு தெரிவித்துள்ளது. தங்கொட்டுவ, மஹாவெவ, மாரவில மற்றும் நாத்தாண்டி பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த நிலைமை பதிவாகி யுள்ளது.



# முன்னேஸ்வரத்தில் கேதாரகௌரி விரதம்

**(உடப்பு க.மகாதேவன்)**

வரலாற்று சிறப்பு வாய்ந்த சிலாபம் முன்னேஸ்வரம் வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஷ்வாமி ஆலயத்தின் கேதாரகௌரி விரதப்பூஜை நேற்று முந்தினம் நடைபெற்றது. 21 நாள்கள் உபவாசம் இருந்து பக்தர்கள் இந்த விரதத்தை அனுஷ்டிப்பது வழக்கமாகும். இந்த விஷேட நிகழ்வில் பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.
















# திருமலையில் நிதியறிவுக் கண்காட்சி

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை மத்திய வங்கியின் கிழக்குப் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில்,பொது மக்களுக்கு நிதியியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிதியறிவுக் கண்காட்சி நடைபெற்றது.

இந்த முழுநாள் கண்காட்சியை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி.எம்.ஹேமந்தகுமார திறந்து வைத்தார்.

இலங்கை மத்திய வங்கி தேசிய ரீதியில் முன்னெடுக்கின்ற நிதியறிவுக் கண்காட்சி என்ற நிகழ்வு நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய திருகோணமலை பிராந்தியத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் காலை 8.30 மணிமுதல் இரவு 7.00 மணிவரை இந்தச்க் கண்காட்சி நடைபெற்றது.

இக்கண்காட்சியில் வங்கிச் சேவைகள், கொழும்பு பங்கு பரிவர்த்தனை - முதலீட்டு வழிகாட்டல்கள், ஊழியர் சேமலாப நிதியச் சேவைகள், ஊழியர் நம்பிக்கை நிதிய சேவைகள்,கொடுகடன் தகவல் பணியகத்தினுடைய சேவைகள்(கிறிப்) உள்ளிட்டவையும், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி வழிகாட்டல்கள், தொழில் முயற்சியாளர் சந்தை, நாணய அரும்பொருடள் காட்சியகம் என்பனவும் இடம் பெற்றிருந்தன.

குறிப்பாக இலங்கை கொடுகடன் பணியகம்(கிறிப்) நடமாடும் சேவையில் இருப்பதால் இங்கு பொதுமக்கள் இலவசமாக தங்களுடைய கிறிப் அறிக்கையினை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த கிறிப் அறிக்கையை வர்த்தக வங்கியொன்றில் பெறுவதாயின் அதற்கென தனியான கொடுப்பனைவ உரிய நபர் வங்கிக்குச் செலுத்த வேண்டும்.

இதே வேளை பாடசாலை மாணவர்களுக்காக நாணய அரும்பொருள் காட்சியகத்தில் இலங்கையின் முதலாவது உத்தியோகபூர்வ நாணயத்தாள் முதல் தற்போது வரையான தாள் மற்றும் குற்றி நாணயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதன்மூலம் ஆரம்ப காலத்தில் இருந்து தற்போது வரை நாணயம் எவ்வாறு வளர்ச்சியடைந்து சென்றிருக்கிறது என்பதையும்,வெளியிடப்பட்ட ஞாபகார்த்த நாணயக் குற்றிகளையும் பார்வையிடக்கூடிய வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிதியியல் கண்காட்சியில் அனைத்து அரச வங்கிகள் மற்றும் தனியார்துறை வங்கிகள் தமது காட்சிக் கூடங்களை அமைத்திருந்தன.

நிகழ்வில் மத்திய வங்கியின் பிராந்திய பணிப்பாளர்,மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர். பிராந்திய முகாமையாளர், வங்கிகளின் பிராந்திய மற்றும் கிளை முகாமையாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.











# இன்றைய ராசி பலன்கள் - 23.10.2025




இன்று உங்கள் விருப்பத்துக்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்தது போல் உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் உங்களுக்கு பணம் கிடைக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்றுகொடுக்கப்பட்டபணிகளைமுடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணபப்டுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப் படுத்த வேண்டும்.





இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமா–னவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சியான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபடலாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப்படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

பணிகளை குறித்த காலத்துக்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.10.2025




எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். நன்கு திட்டமிட்டால் பணத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப்படலாம். பணிச் சுமையயை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது. இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்




இன்றைய முக்கியமான நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந்துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரிகட்டிவிடலாம்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும்.

# கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர் இடமாற்றத்தை ஆட்சேபித்து நாளை போராட்டத்துக்கு முஸ்தீபு

**(பூ.லின்ரன்)**

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை ஆட்சேபித்து நாளை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனை முன்பாக ஆசிரியர்களிம் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட கிளை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அந்தக் கிளையினர் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பு நேற்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் இன்னாசிமுத்து சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது. அவர் அங்கு கூறியவை வருமாறு:-

சேவையின் தேவை கருதிய என்ற போர்வையில் 2026 ஆம் ஆண்டு ஆசிரியர் இடமாற்றம், வடமாகாண கல்வியமைச்சினால் முறைகேடான முறையில் – நீதிக்கு புறம்பான வகையில் – இடம்பெற்றிருக்கிறது. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 82ஆசிரியர்களுக்கு இடம்மாற்றம் வந்துள்ளது.

இந்த இடம்மாற்றத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. ஆசிரியர்களின் நலன்களைக் கருதாமல் – கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலைமையைக் கருதாமல் – போரினால் கல்வியை இழந்து பின்தங்கியுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வியை மேலும் பாதிக்கின்ற வகையில் இடம்பெற்றிருக்கின்றது. 82 ஆசிரியர்களில் கிட்டத்தட்ட 60பேர் வரை 2009 யுத்த காலத்தில் பதுங்கு குழிகளில் யுத்த எறிகணைகளுக்கு மத்தியில் கூட கடமையாற்றியவர்கள். கடந்த கால சேவைகளையும் ஆராயாமல் அவர்கள் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன. போர் முடிய உயர் கல்வியைக் கற்று ஆசிரியர் தொழிலுக்கு வந்தவர்களுக்குக் கூட இந்த இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. புவிசார் நிலைமைகளை கூட ஆராயாமல் ஒவ்வொரு பாடசாலைகளுக்குமிடையில் பல கிலோ மீற்றர் தூரம் கொண்ட கிராஞ்சி, வேரவில் போன்ற போக்குவரத்து வசதியில்லாது பல வருடங்கள் கடமையாற்றியவர்களையும் இடம்மாற்றத்திற்கு உட்படுத்தியுள்ளனர்.

நாங்கள் எங்கும் பணியாற்றக்கூடியவர்கள். அதன் உறுதிப்பாட்டில் நாங்கள் உள்ளோம். ஆசிரியர் பற்றாக்குறை மாவட்டத்தில் நிலவுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் வெற்றிடங்களை நிரப்பிக் கொண்டு ஆசிரியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இடம்மாற்றத்தை வழங்க வேண்டும். தற்போது வெளியிட்டுள்ள ஆசிரிய இடம்மாற்றத்தை இரத்து செய்ய வலியுறுத்தி எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப்பணிமனை முன்பாக போராட்டம் இடம்பெறவுள்ளது.

போராட்டத்தில் அனைத்து ஆசிரியர்களையும் பொதுஅமைப்புக்களையும் பெற்றோர்களையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பும் விடுக்கின்றோம். – என்றார்.